1994 ஏப்ரல் 8]

வினா எண் 228 மற்றும் 229, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 230, திரு. பி. வி. இராஜேந்திரன் இருக்கையில் இல்லை (குறுக்கீடு) அவருக்குப் பதிலாக அந்த ஊர்க்காரர் திரு. தம்புசாமி கேட்கிறார். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

230--

வேதாரண்யம் பகுதியில் மல்லிகை பயிரிடுவோருக்கான வேளாண் இடுபொருட்கள் தட்டுப்பாடு.

**22623-திரு. பி. வி. இராஜேந்திரன்:*

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) வேதாரண்யம் பகுதியில் அதிக அளவில் விளையும் மல்லிகை பயிரிடுவோர்களுக்கான வேளாண் இடுபொருட்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் கிடைக்காமல் விவசாயிகள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வேதாரண்யம் பகுதியில் வேளாண் இடுபொருள்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் தட்டுப்பாடு குறித்து தோட்டக்கலைத் துறைக்கு முறையீடு எதுவும் வரப்பெறவில்லை.

(ஆ) எனவே, பதில் எழவில்லை.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் ஒன்றியம் முழுவதிலும் அதிகமாக பணப்பயிராக மல்லிகை சாகுபடி செய்யப்படுகிறது. அந்த மல்லிகை என்பது சென்னை வரையிலும் வியாபாரத்திற்காக வந்து கொண்டிருக்கிறது. அப்படி முக்கியமாகக் கருதிச் செய்யக்கூடிய அந்த மல்லிகைச் செடி அவ்வப்போது புதிய புதிய நோய்களால் தாக்கப்பட்டு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே விவசாயிகள் பாதிக்காமல் எப்போதும் விவசாயக் கிடங்குகளிலே பூச்சிக் கொல்லி மருந்து வைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.